1981 மார்ச் 28]

தொடர்புபடுத்துவதோ பொருந்தாது. அது தனிப்பட்ட முறையிலே எல்லா நிலைகளிலும் இருக்கக்கூடும். ஆனால் அங்கே ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவுப் பண்டகசாலையில் சர்க்கரை விநியோகத்தில் சில முறைகேடுகள் நடைபெற்றுள்ளது என்பதை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதி செய்தார். இக்குற்றங்களுக்குப் பொறுப்பான கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், இயக்குநர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மீது மேல் நடவடிக்கை கவனிக்கப்பட்டு வழக்குத் தொடருவதற்கான முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதே போன்று ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம் மம்சாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலையிலே சர்க்கரை விநியோகத்தில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜூலை, ஆகஸ்டில் குடும்ப அட்டைதாரர்களுக்கு, முறையாக வழங்குகின்ற அளவுக்கு அதிகமாக சர்க்கரை விநியோகம் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையிலேயே கள்ளச்சந்தையில் விற்கப்பட்டு இருக்கின்றது. மேலும் சில அட்டைதாரர்களுக்கு சர்க்கரை விநியோகம் செய்ததாக தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மீதும், தலைவர் மீதும், இயக்குநர்கள் மீதும், விற்பனையாளர்கள் மீதும் தண்டனை கிடைக்கத்தக்க அளவுக்கு வழக்குத் தொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் முறையாக நடைபெற்று வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சீனி அதிகமாகச் சாப்பிடுவதால் சர்க்கரை வியாதி நிறைய பேர்களுக்கு வருவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, சர்க்கரை குறைவாகச் சாப்பிடுவதற்காக மக்களிடையே பிரச்சாரம் செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டியது அல்ல. மூலக்கேள்வி கள்ளச்சந்தையில் சீனி விற்பது பற்றியதாகும்.

குடியாத்தம் நகரில் தீப்பெட்டித் தொழில் ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண். 526—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரில் ஆயிரக்கணக்கானவர் ஈடுபட்டுள்ள தீப்பெட்டித் தொழிலை அரசு துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) குடியாத்தம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு சேவைபுரிய கீழ்க்கண்ட மூன்று சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(1) குடியாத்தம் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், குடியாத்தம்.

(2) வளத்தூர் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், வளத்தூர்.

(3) பேரறிஞர் அண்ணா சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், குடியாத்தம்.

முதற்கூறிய இரண்டு சங்கங்களும் இயங்கி வருகின்றன. மூன்றாவது சங்கம் விரைவில் செயல்படத் துவங்கும். மேற்குறிப்பிட்ட மூன்று சேவை சங்கங்களும் 300 சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு சேவை புரிய இயலும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச கூலிதான் கொடுக்கப்படுகிறது. அதை மாற்றி நியாயமான முறையில் அவர்களுக்கு கூலி கொடுப்பதற்கு வகை செய்கிற வகையில் அந்தக் கூட்டுறவு சொஸைடிகளுக்கு அறிவுரை வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அரசு ஆவன செய்யும்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, இந்தத் தீப்பெட்டித் தொழில் குடிசைத் தொழிலாக இருக்கின்ற காரணத்தால், அதற்கு போடப்பட்டு இருக்கும் இரண்டு சதவீத விற்பனை வரியை நீக்கிவிட வேண்டும் என்றும், அந்த விற்பனை வரியால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்றும் கூறி அரசுக்கு அவர்கள் மனு செய்து இருக்கிறார்கள். ஆகவே,

அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலையை குடிசைத் தொழிலாகச் செய்பவர்களுக்கு, கூட்டுறவுத் துறை மூலமாகச் செய்பவர்களுக்கு, இந்த வரி விதிப்பைக் குறைத்து, அப்படிப்பட்ட தொழிலில் அவர்கள் அதிக அளவில் ஈடுபட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

மதுரை பால்வள நிறுவனம்.

*வினா எண். 527—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பால்வள நிறுவனத்தில் சென்ற ஆண்டு (1978-79) ஏற்பட்ட இழப்பு (loss) எவ்வளவு ?

(ஆ) அதற்கான காரணங்களை அரசு ஆய்ந்து மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மதுரை பால்வள நிறுவனத்தில் சென்ற ஆண்டு (1978-79) இழப்பு ஏதும் ஏற்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடம் இல்லை.

திரு. குமரி அனந்தன் : அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இழப்பு ஏதும் இல்லை என்கிற பதிலைத் தந்து இருக்கிறார்கள். மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆயினும், மஸ்தூர் போன்றவர்களுக்கு 2·85 ரூபாய் கூலியும், மற்றவர்களுக்கு 4 ரூபாயும் கொடுக்கப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அதேபோன்று, சொசைடிகளில் இருந்து வாங்கும் பாலுக்கு லிட்டருக்கு ரூபாய் 1.35 கொடுக்கப்படுகிறது என்றும், விற்கும் விலை ரூபாய் 2.10 என்றும் இருப்பதால், லாபம் எவ்வளவு கிடைத்து இருக்கிறது என்கிற தகவலை அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, இது பற்றிய விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.